

விழுப்புரம் தெற்கு மாவட்டம் விக்கிர வாண்டி தொகுதி காணை தெற்கு ஒன்றி யம் வீரமூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் முன்னாள் ஒன்றிய கவுன் சிலர் கண்ணகி இராமநாதன் கணவரும் விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் R.அரங்க நாதன் தந்தையுமான மறைந்த V.R. இராம நாதன் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது நினைவு மண்டபத்தை விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி திறந்து வைத்து ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் கல்பட்டு V.இராஜா, கை.ரா.சடகோபன், திருமதி N.கலைச் செல்வி, சிவக்குமார் , வீரராகவன், பழனி, கருணாகரன், புனிதா அய்யனார், சிவ ராமன், அழகப்பன், கலாவதி இராம லிங்கம், தேவபூஷ்னம் முருகன், அன்பழகன், அரங்கநாதன், சபரிநாதன், ஐயப்பன், கதிரவன், பார்த்தசாரதி, சூர்யா, மணியரசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று அனைத்துக் கட்சி பிரமுகர்களுடன் புதிய ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய தற்காலிக அலுவலகம் திறப்பு விழாவில் கலந்துகொண்டு, புதிய தற்காலிக அலுவலகத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். பொதுமக்களின் பல ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றித் தந்த ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அவர்களுக்கு அனைத்துக் கட்சி நிர்வாகிகளும் மற்றும் பொதுமக்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பையும் தெரிவித்து மகிழ்ந்தனர்.

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில் எந்தவித முன்னேற்றமும் இல்லை!

தமிழக அரசையும், காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

முன்னாள் அமைச்சர் – விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலை! எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தலைமை!

செஞ்சி, அக். 22 -

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில் 10 நாட்கள்ஆகியும் வழக்கில் எந்தவித முன்னேற்ற மும் இல்லாத நிலையில்சிறுமியை இதுவரை கண்டுபிடிக்காத தமிழக அரசையும், காவல்துறை யின்மெத்தன போக்கை கண்டித்து தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற உள் ளதாக விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கையில் கூறுகையில்:

செஞ்சி அருகே 7 வயது சிறுமிமாயமான வழக்கில் 10 நாட்கள்ஆகியும் வழக் கில் எந்தவித முன்னேற்ற மும் இல்லாத நிலையில் சிறுமியை இதுவரை கண் டுபிடிக்காத தமிழக அர சையும், காவல்துறையின் மெத்தனப் போக்கையும் கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்டச் செய லாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில், ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணி வேந்தன் தலைமையில் இன்று (22ஆம் தேதி வியா ழக்கிழமை) ஆலம்பூண்டி யில் தி.மு.க. சார்பில் கண் டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே மாயமான 7 வயது சிறுமி ஹேமாவதி யைத் தேடும் பணி 10வது நாளாக நேற்றும் தீவிர மாக நடைபெற்றது.

சிறுமியை கண்டுபி டிக்க 100க்கும் மேற்பட்ட போலீசார் தீவிர தேடுதல் மற்றும் விசாரணையில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த சில தினங்களாக ஏரிகள், கிணறுகள், மலைப்பகுதிகள், குடிநீர் தொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் போலீசார் தேடி வந்தனர்.

மேலும், சந்தேகத்திற்கி டமாக வெளியூர்களில் இருந்து வந்தவர்கள் மற் றும் அப்பகுதியில் இருந்து வெளியே சென்றவர்கள் குறித்தும் தீவிர விசா ரணை நடத்தப்பட்டு வந்தன.

சிறுமி காணாமல் போன தகவல் அறிந்த முன்னாள் அமைச்சர் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான், ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் ஆகியோர் சிறுமியின் வீட் டிற்கு சென்று அவரது பெற்றோரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும் சிறுமி காணா மல் போனது தொடர்பாக பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வரும் நிலையில்,

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் தலைமையி லான போலீசார் ஆலம் பூண்டி, தென்பாலை, வட பாலை, மல்லான்டி உள் ளிட்டபல்வேறு கிராம சாலைகள் வழியாக சென் றுஅப்பகுதியில் விசாரணை மேற்கொண்டார் மேலும் தொடர்ந்து சத்தியமங்க லம் காவல் நிலையத்தில் தனி படைபோலீசாருடன் பல்வேறு ஆலோ சனை களை மேற்கொண்டார்.

தொடர்ந்து செஞ்சியில் உள்ள காவல் துணை கண் காணிப்பாளர் அலுவலகத் தில் விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. அருளரசு தலை மையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவா ணன் முன் னி லை யில் டி.எஸ்.பி. க்கள், இன்ஸ் பெக்டர்கள், மற்றும் தனிப்படை காவலர்கள் கலந்து கொண்ட ஆலோச னைக் கூட்டம் நடைபெற் றது .இதில் சிறுமி காணா மல் போனதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல் வேறு கட்ட நடவடிக்கை கள் மற்றும் சிறுமியை விரைந்து கண்டுபிடிப்ப தற்கான தேவையான ஆலோசனைகள் வழங்கப் பட்டது.

மேலும் இன்று 11வது நாளாக சிறுமியை விரைந்து கண்டுபிடிக்க போலீசார் தீவிர நடவ டிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சிறுமி மாயமான வழக்கில் 11 நாட்கள்ஆகியும் வழக்கில் எந்தவித முகாந்திரமும், முன்னேற்றமும் இல்லாத நிலையில்சிறுமியை இது வரை கண்டுபிடிக்காததமி ழக அரசையும், காவல் துறையின்மெத்தன போக் கைக் கண்டித்து விழுப் புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ் தான் முன்னிலையில், ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணிவேந்தன் தலைமை யில் இன்று (22ஆம் தேதி வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலம்பூண் டியில் திமுக சார்பில் மபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற உள்ளது.

இதில் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண் டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செய லாளர் செஞ்சி மஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாகர்கோவில் மாநகரப் பகுதியில் கால்வாய்கள் தூர்வாரும் பணி!

எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆய்வு!

நாகர்கோவில், ஆக். 22-

நாகர்கோவில் மாநக ராட்சிக்கு உட்பட்ட பறக் கின் கால்வாய் மற்றும் காங் கேயன் கால்வாய் நீண்ட நாட்களாக தூர்வாரப்படா மல் மணல் தூர்ந்து காணப் பட்டது. இதனால் மழை நேரங்களில் மழை நீர் சாலைகளில் பெருக்கெ டுத்து ஓடியது.



எனவே கால்வாய்களை வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக தூர்வார வேண் டும் என்று எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. மாவட்ட கலெக் டர் மற்றும் மாநகராட்சி ஆ ணை யா ள ரி டம் கோரிக்கை விடுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து காங் கேயன் கால்வாய் மற்றும் பறக்கின் கால்வாயை தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது.

ஜே.சி.பி. இயந்திரம் மூலம் இப்பணிகள் நடந்து வருகின்றன. தூர்வாரும் பணிகளை எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய் தார். பின்பு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கூறியதாவது:

நாகர்கோவில் மாநகர பகுதியில் வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக கால் வாய்களை தூர்வாரும் நட வடிக்கைகள் மேற்கொள் ள ப் ப ட் டு ள் ள ன . காங்கேயன் கால்வாய் 2 கிலோமீட்டர்தூரத்திற்கும், பறக்கின் கால்வாய் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தூர் வாரப்படுகிறது. கால்வாய்க ளில் உள்ள புதர்கள் அகற்றப்பட்டு மண் தோண் டப்பட்டு கால்வாயை சீர மைக்கும் பணி நடந்து வரு கிறது. நாகர்கோவில் நகரில் உள்ள அனைத்து கால்வாய் களும் தூர்வாரப்பட்டு சுத் தம் செய்ய உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

இந்த ஆய்வில் மாநக ராட்சி மேயர் மேரி பிரின்சி லதா, மண்டல தலைவர் அகஸ்டினா கோகிலவாணி, கவுன்சிலர்கள் அன்னலட் சுமி, பியாசா ஹாஜி பாபு, தி.மு.க. வட்ட செயலாளர் கள் நாகராஜன், கண்ணன் மற்றும் மாநகராட்சி உதவி பொறியாளர்கள் ராஜா, பழனியம்மாள், சுஜின் ஆகி யோர் உடனிருந்தனர்.

த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததன் எதிரொலி:

சென்னை சாலைகள் மழையில் கடுமையாக சேதம் - பொதுமக்கள் கடும் அவதி!

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடாமல் விஜய் அரசு ஆழ்ந்த உறக்கம்!

சென்னை, அக். 22 -

த.வெ.க. அரசு முன் னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுக்காததால் சென்னை சாலைகள் மழை யில் கடுமையாக சேதம டைந்துள்ளன. பருவம ழைக்கு முன்பே சாலை களை சீரமைக்காமலும், புதிய சாலைகளை அமைக் காமலும் அலட்சியம் காட் டியதால் மக்கள் கடும் அவ தியடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கிய முதல் நாளில் இருந்தே சென்னையில் மழை வெளுத்து வாங்கி வருகிறது. இந்நிலையில், விஜயின் த.வெ.க. அரசு, பருவமழைக்கு முன்பே சாலைகளை சீரமைக்கா மலும், புதிய சாலைகளை அமைக்காமலும் அலட்சி யம் காட்டியதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குண்டும், குழியுமான சாலைகளில் மழைநீர் தேங் கியுள்ளதால் பள்ளம் இருப்பது தெரியாமல் வாகன ஓட்டிகளும், பாத சாரிகளும் கீழே விழுந்து செல்லும் அவலம் நிலவு கிறது. மழைநீரில் கழிவு நீரும் கலந்திருப்பதால் சாலைகளில் செல்லும் மக் கள் பாதிக்கப்பட்டுள்ள னர். சென்னையில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட் டுள்ளநிலையில், மீட்பு மற் றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடாமல் த.வெ.க. அமைச்சர்களும், அக்கட்சி யின் சட்டமன்ற உறுப்பி னர்களும் வீடுகளில் முடங்கி உள்ளதாக மக்கள் கொந்தளிக்கின்றனர்.

வேளச்சேரி

இரவு முழுவதும் பெய்த கனமழையால் சென்னை வேளச்சேரி பகுதியில் உள்ள சாலைகளிலும், குடி யிருப்பு பகுதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் இப்பகுதி மக் கள் மிகுந்த பாதிப்புக் குள் ளாகினர். கடந்த தி.மு.க. ஆட் சியில் பல்வேறு மழைக்கால திட்ட பணி கள் நிறைவேற்றப்பட்டா லும், அந்த மழை நீர் வடி கால்வாய்களை ஆளும் த.வெ.க. அரசு முறையாக தூர்வாராததால் முழங் கால் அளவிற்கு தண்ணீர் தேங்கியது. இதனால் அலு வலகம் செல்வோரும் பொது மக்களும் பாதிப்புக் குள்ளாகினர்.

திருவள்ளூர் மாவட்டம்

ராமஞ்சேரியில் எலும்புக்கூடான மின்கம்பங்கள்!

கண்டுகொள்ளாத த.வெ.க. அரசு!

திருவள்ளூர், அக். 22 -

திருவள்ளூர் அடுத்த பூண்டி ஊராட்சி ஒன்றி யம், ராமஞ்சேரி ஊராட்சி யில் சேதமடைந்து சாய்ந்த நிலையில் உள்ள மின்கம் பங்களைப் பார்க்கும்போது, மக்களின் பாதுகாப்பு குறித்து அதிகாரி களுக்கு அக்கறை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது!

3 ஆயிரத்திற்கும் மேற் பட்ட குடும்பங்கள் வசிக் கும் ராமஞ்சேரி ஊராட்சி யில், விவசாயிகள் பயன் படுத்தும் சாலைகளில் உள்ள பல மின்கம்பங்கள் சேதமடைந்து எலும்புக்கூடு களைப் போல் காட்சியளிக் கின்றன. மின்கம்பங்கள் முறையாகப் பராமரிக்கப் பட வேண்டிய நிலையில், சாய்ந்த மின்கம்பங்களின் மின் ஒயர்களைக் கட்டை களால் முட்டு க்கொடுத்து தாங்கிப் பிடிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

சாய்ந்த மின்கம்பங்க ளால் மின் ஒயர்கள் தாழ் வாகச் செல்வதாகவும், டிராக்டர் உள்ளிட்ட விவ சாய வாகனங்களில் செல் லும்போது மின் ஒயர்கள் உரசும் அபாயம் இருப்ப தாகவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். மின் ஒயர்கள் உரசினாலோ, கம்பங்கள் முறிந்து விழுந் தாலோ ஏற்படக்கூடிய ஆபத்தை நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது.

மக்கள் புகார் தெரிவித் தும் உரிய சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட வில்லை என்பது அவர் களின் குற்றச்சாட்டு. இது குறித்து மின்வாரிய ஊழி யர்களிடம் கேட்டபோது, ஆட்கள் பற்றாக்குறையால் சீரமைப்புப் பணியில் தாம தம் ஏற்படுவதாகவும், நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் இரெ. இளம்வழுதி
அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மூதேவிகள்!



தேர்தல் ஆணையத்தை கைப்பாவை
ஆக்கிக் கொண்டு

ஆட்சியில் தங்களை அமர்த்துவதற்கு
ஏதுவான அளவில் வாக்காளர்
பட்டியலை தயாரித்து

அதன் மூலம்
தொடர்ந்து
நாட்டை தாங்களும்

தங்களின்
ஆதரவு பெற்ற அடிமைகளே
பெரும்பான்மை மாநிலங்களையும்
ஆள வேண்டும் என்பதற்கான
ஏற்பாடு தான்

"SIR – EVM – ஞானேஷ்குமார் ஆகியவை
என்பது
அம்பலப்பட்டு நிற்கிறது.

அப்படி என்றால் இந்திய தேசத்தின்
மாட்சிமை மிக்க ஜனநாயகம்
மீட்கப்பட ரத்துசெய்யப்பட
வேண்டியது SIR– EVM – ஞானேஷ்குமார்
மட்டுமல்ல;
இந்த மூதேவிகள் இதுவரை
கூடி நடத்திய தேர்தல்களும் தானே...

என்னநாஞ்
சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்